# யானைக்குட்டி

ஆங்கிலத்தில் : ருட்யார்ட் கிப்ளிங்

தமிழில் : உத்ரா துரைராஜன்

சித்திரம்: ஜீன் ப்யரி பெடிட்

நிறக்கலவை: க்வின் ஜீ



என் கண்மணிகளே... முன்னொரு காலத்துல, ரொம்ப ரொம்ப காலத்துக்கு முன்னாடி, நம் செல்ல யானைக்கு தும்பிக்கை கிடையாது. இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் அசையும், ஒரு கருப்புநிற மொன்னை மூக்குதான் குண்டாய் மொத்தையாய் இருந்தது. அதனால் கீழிருந்து எதையும் அவனால் பொறுக்கி எடுக்க முடியாது. ஆனால், ஒரு யானை, ஒரு குட்டியானை, நம்ம யானைக்குட்டி ஆப்பிரிக்காவில் வாழ்ந்து வந்தான். *தீராத கேள்வித்தாகத்துடன்*, ஏதாவது கேள்வி கேட்டுகிட்டே இருக்கும் *துருதுரு* யானைக்குட்டி அவன். அத்தனை அத்தனை கேள்விகள், துருதுருன்னு கேள்விகளாலேயே ஆப்பிரிக்கா முழுவதையும் நிரப்பினான்.



நெடிய அத்தை நெருப்புக்கோழி அந்தப் பக்கம் வந்தாங்க. அத்தை.... "ஏன் உங்க இறகுகள் பெரிசா வளரல?"ன்னு கேட்டதுக்கு கிடைச்ச பதில், மிகமிக வலிமையான அவங்க காலால் 'பொட்டு'னு ஒரு உதைதான்.



ஓங்கி வளர்ந்த ஒட்டகச்சிவிங்கி மாமாவைப் பார்த்து, "அழகான உங்க தோல் மேல புள்ளிகள் எப்படி வந்தது"ன்னு கேட்டதுக்கு பதில், மிகமிக வலிமையான கால் குளம்புகளால் 'பொளேர்'னு ஒரு உதை. ஆனாலும் அவனுடைய *துருதுரு கேள்வித்தாகம்* அப்படியேதான் இருந்தது!



பெரிய பெரியம்மா நீர்யானை வந்தாங்க. “ஆமாம்.... ஏன் உங்க கண்கள் சிவப்பா இருக்கு?” அகண்டகண்ட குளம்புகளால் ஒரு உதைதான் பதிலாகக் கிடைச்சது.



அடுத்து, அடர்ந்தமுடி அத்தான் பபூன் குரங்கு. தர்பூசணி பழத்தோட சுவை ஏன் அந்த மாதிரி இருக்குன்னு கேட்கப்போக முடிநிறைந்த கையாலேயே ‘டொப்பு’னு ஒரு உதைதான் பதிலாகக் கிடைச்சது. ஆனாலும் நம்ம யானைக்குட்டியோட *துருதுரு கேள்வித்தாகம்* கொஞ்சமும் குறையல, அப்படியேதான் இருந்தது. எதைப் பார்த்தாலும் கேள்வி, கேட்டாலும் அதைப் பற்றி கேள்வி, தொட்டாலும் கேள்வி, முகர்ந்தாலும் கேள்வி, கேள்வி, கேள்வி… அத்தை, சித்தி, மாமி, மாமா, அத்தான், பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பா எல்லாருமே பட்டுனு ஒரு உதை போட்டாங்க. ஆனாலும் அவன் மனம் முழுக்க கேள்விகளாலேயே நிரம்பி இருந்தது.



அன்று ரதசப்தமி. எல்லோரும் கூடியிருந்து கொண்டாடினாங்க. அந்த அழகான காலைவேளையில் யானைக்குட்டி அதுவரை தான் கேட்காத ஒரு கேள்வியை, மிக நல்ல ஒரு புதுக்கேள்வியை கேட்டான். “முதலைகள் இரவு உணவிற்கு என்ன சாப்பிடும்?” ‘ஷ்…ஷ்..ஷு..ஷு..’ எல்லோரும் அவனை அமைதியாக இருக்கும்படி அதட்டினார்கள். கேள்வி கேட்டதற்காக அவனை எல்லோருமே தொப்தொப்பென்று உதைத்தார்கள். பாவம்! அதுவும் விடாமல் ரொம்பநேரம் உதைத்தார்கள்!!



கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் முடிந்ததும் உட்காரு-ஓய்வெடு-முள்-புதர் நடுவே ஒரு கொலோகொலோ பறவையைப் பார்த்தான். “என் அப்பா, என் அம்மா, என் அத்தை, மாமா, பெரிய பெரியம்மா, அத்தான் எல்லாருமே ஏதாவது கேள்வி கேட்டுகிட்டே இருக்கும் என் துருதுருதனத்திற்காக உதை போட்டாங்க. ஆனாலும் முதலைகள் இரவு உணவிற்கு என்ன சாப்பிடும்னு தெரிஞ்சிக்க விரும்பறேன்.”

கொலோகொலோ பறவை வருத்தமான குரலில், ‘‘போ…போய் நீயே விடை கண்டுபிடி. கனவுதரும் நல்மரங்கள் நிறைந்த பெரிய்ய்ய பிசுபிசு பச்சைநிற லிம்பொப்போ நதிக்கரையில் உனக்கு விடை கிடைக்கும்” என்றது அவனிடம்.

(புரிதலின்றி மேற்கத்தியர் இம்மரங்களை காய்ச்சல் தரும் மரங்கள்-fever trees என தவறாகக் குறிப்பிட்டு, அதுவே ஆங்கிலப் பெயராகத் தொடர்கிறது - உத்ரா)



ரதசப்தமிக்கு அடுத்தநாள் அதிகாலை, சூரியனும் நம் பூமியும் அதன்அதன் பாதையில் எப்போதும்போல் போய்க்கொண்டிருந்தன. *துருதுரு கேள்வித்தாகம்* நிறைந்த நம் யானைக்குட்டியும் புறப்பட்டான். நூறு பவுண்ட் எடையுள்ள வாழைப்பழங்களையும் (சிவப்புநிற சின்ன குட்டை ரகம்), நூறு பவுண்ட் எடையுள்ள கரும்பையும் (ஊதாநிற நீள ரகம்) பதினேழு தர்பூசணிகளையும் (பச்சைநிற பந்து ரகம்) சுமந்துகொண்டு தன் அன்பான குடும்பத்தினரைப் பார்த்து, "போய் வருகிறேன்... நல்மரங்கள் நிறைந்த பெரிய்ய்ய பிசுபிசு பச்சைநிற லிம்பொப்போ நதிக்கரைக்கு நேரில் போகிறேன். அங்கேபோய் முதலைகள் இரவு உணவிற்கு என்ன சாப்பிடும் என அறிந்து வரப்போகிறேன்'' என்றான். ''வாழ்த்துக்கள்… போய்வா" என மீண்டும் எல்லோருமே மொத்து மொத்தென்று முதுகில் வைத்தார்கள். உதைப்பதை நிறுத்தும்படி அமைதியாய், மிக அடக்கமாக அவன் கேட்டுக்கொண்டபோதும் யாரும் நிறுத்தவில்லை.



அவன் கிளம்பிவிட்டான். மனது தெம்பாய் இருந்தாலும், வெப்பத்தால் உடல் சோர்வாய் உணர்ந்தான். ஆனாலும் சளைக்கவில்லை. தர்பூசணிகளை சுவைத்துக்கொண்டே அசராமல் நடையைத் தொடர்ந்தான். தோலை வழி நெடுக வீசிக் கொண்டே நடந்தான். அவனால்தான் கீழிருந்து எதையும் பொறுக்கி எடுக்கமுடியாதே! க்ரஹாம் டௌனிலிருந்து கிம்பெர்லி சென்றான், அடுத்து காமா நகரம் சென்றான். நேரே வடகிழக்கு திசையில் நகர்ந்தான். தர்பூசணிகளை சாப்பிட்டுக் கொண்டே வந்ததில், ஒருவழியாய் கனவுதரும் நல்மரங்கள் நிறைந்த பெரிய்ய்ய பிசுபிசு பச்சைநிற லிம்பொப்போ நதிக்கரையை வந்து சேர்ந்தான். கொலோகொலோ பறவை சொன்னது போலவே அங்கே நல்மரங்கள் நிறைய்ய்ய நிறைய்ய்ய இருந்தன.

செல்லங்களே! நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும், தெரிந்து கொள்ளவேண்டும். அதாவது அந்த வாரம், அந்த நாள், அந்த நேரம், அந்த நிமிடம்வரை நம்முடைய *துருதுரு கேள்வித்தாகம்* உடைய் யானைக்குட்டி முதலையை பார்த்ததேயில்லை. ஆதனால் அவனுக்கு முதலை என்றால் எப்படி இருக்கும் என்று சுத்தமாக ஒன்றுமே தெரியாது! அவனுக்குத் தெரிந்ததெல்லாம் துருதுருன்னு ஏதாவது கேள்வி கேட்டுகிட்டே இருப்பதுதான்.




ஒரு கல்லைச் சுற்றி படுத்துக்கொண்டிருந்த ஓர் இருநிற மலைப்பாம்புதான் முதன்முதலில் அவன் கண்ணில்பட்டது.

“ம்..ஏங்க…சாமீ…” ரொம்பவும் மரியாதையுடன் கூப்பிட்டான் நம் யானைக்குட்டி. “இந்த அதிபயங்கர பகுதியில் நீங்க ஏதாவது முதலையை பார்த்திருக்கீங்களா?”

“நான் முதலையை பார்த்திருக்கேனாவா?.. அடுத்து என்ன கேட்கப்போற?” எரிச்சல்பட்டது இருநிற மலைப்பாம்பு.

“ம்…சாமீ…இரவு உணவிற்கு அவர் என்ன சாப்பிடுவார் என்று சொல்லுங்களேன்?” என்று கேட்டான் யானைக்குட்டி.

கல்லைச் சுற்றியிருந்த இருநிற மலைப்பாம்பு சடசடவென தன்னை விடுவித்துக்கொண்டது. செதில்செதிலான தன் வால்நுனியால் யானைக்குட்டியை ஒரு உதைவைத்தது.

“என்ன இது? அப்பா, அம்மா, அத்தை, மாமா, பெரிய பெரியம்மா நீர்யானை, அத்தான் பபூன் எல்லாருமே ஏதாவது கேள்வி கேட்டுகிட்டே இருக்கும் என் துருதுருதனத்திற்காக உதை போட்டாங்க. இப்போ நீங்களும் அதையேதான் செய்தீங்க!” வியந்தான் யானைக்குட்டி.

"போய் வருகிறேன்..." அடக்கமாக அவன் இருநிற மலைப்பாம்பிடம் விடைபெற்றான், மீண்டும் கல்லைச் சுற்றி படுத்துக்கொள்ள உதவினான் நம் யானைக்குட்டி.

அங்கிருந்தும் அவன் கிளம்பினான். மனது தெம்பாய் இருந்தாலும், வெப்பத்தால் உடல் சோர்வாய் உணர்ந்தான். ஆனாலும் சளைக்கவில்லை. தர்பூசணிகளை சுவைத்துக்கொண்டே அசராமல் நடையைத் தொடர்ந்தான். தோலை வழி நெடுக வீசிக் கொண்டே நடந்தான். அவனால்தான் கீழிருந்து எதையும் பொறுக்கி எடுக்கமுடியாதே! நல்மரங்கள் நிறைந்த பெரிய்ய்ய பிசுபிசு பச்சைநிற லிம்பொப்போ நதி அருகே, ஏதோ ஒன்றில் கால் தடுக்கி விழுந்தான். அது ஒரு மரத்துண்டு என அவன் நினைத்தான்!!



என் கண்மணிகளே…ஆனா அது என்ன தெரியுமா? நிஜமாகவே அது ஒரு முதலை! அந்த முதலை தன்னோட முட்டைக் கண் ஒன்றை மூடித்திறந்தது, கண்ணடிப்பது போல!!

"ம்..ஏங்க…சாமீ…" ரொம்பவும் மரியாதையுடன் கூப்பிட்டான் யானைக்குட்டி. "இந்த அதிபயங்கர பகுதியில் நீங்க எப்பவாவது ஏதாவது முதலையை பார்த்திருக்கீங்களா?"

முதலை இன்னொரு கண்ணையும் மூடித் திறந்தது. பாதி வாலை சேற்றிலிருந்து வெளியே தூக்கியது. நம் குட்டியானை பொறுமையாகப் பின்னால் நகர்ந்தான். திரும்பவும் பளாரென உதை வாங்கத் தயாராக இல்லை நம் யானைக்குட்டி.



“கொஞ்சம் இங்கே வாப்பா, என் சுட்டிப் பையா,'' என்ற முதலையார், “ஆமாம்… நீ ஏன் இது போலெல்லாம் கேட்கிறாய்?'' என்று கேட்டது.

“ம்…சாமீ..” மரியாதை கலந்த பயத்துடன் பதில் சொன்னான் நம் யானைக்குட்டி. “நான் கேள்வி கேட்ட உடனே, அப்பா ஒரு உதை வைத்தார், அம்மாவும்தான். நெடிய அத்தை நெருப்புக்கோழி பொட்டென போட்டார், கேள்வி கேட்டேன் என்று ஓங்கி வளர்ந்த ஒட்டகச்சிவிங்கி மாமாவும் பொளேர் என்று உதை விட்டார். பெரிய பெரியம்மா நீர்யானை என்னை விட்டார்களா, இல்லையே! அவரிடம் பதிலாகக் கிடைத்ததும் ஒரு உதைதான். அடுத்து, அடர்ந்தமுடி அத்தான் பபூன் தந்த டொப்புடொப்பு உதை நினைவில் அப்படியே இருக்கு. இந்த ஊருக்கு வந்தால், இருநிற மலைப்பாம்பு செதில்செதிலான தன் வால்நுனியால் வைத்த உதையை மறக்கவே முடியாது. நான் முன்னர் வாங்கிய எல்லா உதைகளையும்விட ரொம்ப வலிமையானது. ரொம்பவே வலிச்சது. நான் கேள்வி கேட்ட உடனே, எல்லோருக்கும் ஏதோ தோணி, உடனே உடனே என்னை அடிக்கிறாங்க. இவங்க எல்லாரையும் போலவே உங்களுக்கும் தோணினா, நீங்களும் என்னை அடிக்கத்தானே போறீங்க. அவங்களப் போலதானே நீங்களும் செய்வீங்க. என்னால திரும்பத்திரும்ப உதைவாங்க முடியாது” என்றான் யானைக்குட்டி.

“வாடா என் சுட்டிப் பயலே…நீ தேடி வந்த முதலை நான்தான், சரியா'' என்று தன்னை அடையாளம் காட்டிக்கொள்ள, முதலைக்கண்ணீர் கொஞ்சம் வடித்தது அந்த முதலை.

யானைக்குட்டிக்கு வியர்த்து விறுவிறுத்து மூச்சு இரைத்தது. முட்டி போட்டாற்போல் நதிக்கரையில் அமர்ந்துகொண்ட சுட்டி யானைக்குட்டி, “ஆ… இத்தனை நாட்களாக எப்படியாவது நான் பார்த்துவிட வேண்டுமென்று உங்களைத் தேடித்தேடி அலைந்தேன். இரவு உணவிற்கு நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்று சொல்லுங்களேன்?” என்று கேட்டான்.

“வாடா… என் சுட்டிப் பயலே…வா! ரகசியமாய் அதைச் சொல்கிறேன்… அருகே வாடா,” என்று ஆசையாய் கூப்பிட்டது முதலை.

முசுமுசு வாடை அடிக்கும் கோரப்பல் முதலையின் வாய்க்கு அருகே தன் தலையை மெதுவாய் கொண்டு சென்றான் யானைக்குட்டி.



யானைக்குட்டியின் குட்டி மூக்கை லபக்கென பிடித்துக்கொண்டது முதலை. அந்த வாரம், அந்த நாள், அந்த மணிநேரம், அந்த நிமிடம்வரை அந்த மொன்னை மூக்கு சின்னதுதான். ஆனாலும் ஒரு மூக்கு என்ன வேலை எல்லாம் செய்யவேண்டுமோ அவற்றை எல்லாம் செய்தது யானைக்குட்டியின் மொன்னை மூக்கு.

நரநரவென கோரப்பற்களை கடித்துக்கொண்டே, “யானைக்குட்டியை சாப்பிட்டு இன்னிலேந்து தொடங்கலாம்னு எனக்குத் தோணுது” என்று மொன்னை மூக்கை இழுத்தது முதலை.

ஆ! கண்மணிகளே, நம்ம யானைக்குட்டிக்கு ரொம்பவே எரிச்சல் வந்தது. “என்ன விது! விது என்ன! வலிதுது!!” என்று மூக்கால் முனகினான்.

கரையிலிருந்த இருநிற மலைப்பாம்பு சரசரவென இறங்கி வந்தது. “என் குட்டி நண்பா… உடனே இப்போதே நான் சொல்கிறபடி செய். எவ்வளவு இழுக்க முடியுமோ உன்னை அவ்வளவு இழு. எனக்குத் தெரிந்தவரையில், உனக்குப் புதிதாய் அறிமுகமான அவன், பெரியபெரிய புட்டா வைத்த தோலங்கி போர்த்திய அவன் (முதலையைத்தான் இப்படி குறிப்பிட்டது) அத்திசையில் ஓடும் தெளிந்த நீரோட்டத்தில் உன்னைப் புரட்டித் தள்ளிவிடக் கூடியவன், கண்ணிமைக்கும் நேரத்தில் அதை அதிவிரைவாய்ச் செய்வான் அவன்.”

இருநிற மலைப்பாம்புகள் எப்போதுமே இப்படித்தான் பேசும்.

யானைக்குட்டி கீழே நன்றாய் அமர்ந்து கொண்டான். அவன் மொன்னை மூக்கை தன் பக்கம் இழுக்கஇழுக்க, அது நீண்டு கொண்டே இருந்தது. தோற்றுவிடுவோமோ என்று நினைத்த முதலை திமுதிமுவென வாலை ஆட்டிக்கொண்டே நீருக்குள் சென்றது. அதனால் வந்த நீர்க்குமிழிகளால் நீரே நுரைத்தது. மொன்னை மூக்கை முதலை இழுஇழு என்று தன் பக்கம் இழுத்தது.

யானைக்குட்டியின் மூக்கு நீளமாக நீண்டது. தன் நான்கு சின்னக் கால்களையும் யானைக்குட்டி அகல விரித்து அமர்ந்து, மூக்கை இழுஇழு என்று தன் பக்கம் இழுத்தான். மூக்கு மேலும் மேலும் நீண்டது. துடுப்பு போடுவது போல் வாலை பொளேர் பொளேர் என்று விளாசு விளாசியது முதலை. அந்தப்பக்கம் இழுஇழு என்று முதலை இழுக்கஇழுக்க, இந்தப்பக்கம் யானைக்குட்டி இழுக்கஇழுக்க, யானைக்குட்டியின் மொன்னை மூக்கு மேலும் மேலும் மேலும் நீண்டது. ஆ! செம்மையாக வலித்தது யானைக்குட்டிக்கு.

கால் வேறு வழுக்குவது போல் இருந்தது குட்டிக்கு. கிட்டத்தட்ட ஐந்து அடி வளர்ந்திருந்த மூக்கால் முனகியது. “தொம்ப தொம்ம்ப பலிகுதே…விது”

கரையிலிருந்து இறங்கி வந்த இருநிற மலைப்பாம்பு, யானைக்குட்டியின் பின்னங்காலில் வலுவான இருமுடி கட்டியது. “முன்யோசனை செய்யாத, அனுபவமில்லாத பயணியே நாம் இப்போது கொஞ்சம் வீரதீர செயல் செய்ய முற்படுவோம். அப்படிச் செய்யாமல் போனால், அத்திசையில் எப்போதும் தன்னை செலுத்திக்கொள்ளும் கூரான-முள்கவசம்-அணிந்த-சண்டைக்காரன் (முதலையைத்தான் இப்படி குறிப்பிட்டது கண்மணிகளே!) உன் வருங்காலத்தைப் பாழாக்கிவிடுவான்” என்று சொன்னது இருநிற மலைப்பாம்பு.

இருநிற மலைப்பாம்புகள் எப்போதுமே இப்படித்தான் பேசும்.




பாம்பும் யானைக்குட்டியும் இழுத்தன. முதலையும் இழுத்தது. ஆனால் பாம்பும் யானைக்குட்டியும் சேர்ந்து மிகமிக வலுவாக இழுத்தன. யானைக்குட்டியின் மொன்னை மூக்கை ஒருவழியாக விட்டுவிட்டது முதலை. அப்போது ஏற்பட்ட ‘டொப்’பென்ற சத்தம் லிம்பொப்போ முழுவதும் அதிரும்படி கேட்டது.



‘தொபகடீ’ரென்று சரிந்து உட்கார்ந்தான் யானைக்குட்டி. “ரொம்ப நன்றிங்க..” இருநிற மலைப்பாம்பிடம் நன்றி சொன்னான் அழகாய். அப்புறம்தான் வலிமிகுந்த தன் இழுபட்ட மொன்னை மூக்கை, குளிர்ந்த வாழை இலைகளால் சுற்றினான். அந்த பெரிய்ய்ய பிசுபிசு பாசிநிற லிம்பொப்போ நதிக்குள் அதை முக்கினான்.

“எதுக்காக நீ அப்படி செய்யறே?” கேட்டது இருநிற மலைப்பாம்பு.

“ம்... ஐயா.. என்னோட மூக்கு ரொம்பவும் உருமாறிடுச்சே. அது திரும்பவும் முன்போல சின்னதாகணும்னு நான் நதியில் முக்கினேன்.”

“அதுக்கு ரொம்ப காலம் ஆகும். தங்களுக்கு எது நல்லதுன்னு சிலருக்கு புரியறதில்ல. என்ன செய்ய!” அங்கலாய்த்தது இருநிற மலைப்பாம்பு.



தன் மூக்கு சுருங்கிச் சிறியதாகும் என்று மூன்று நாட்கள் அங்கேயே அமர்ந்திருந்தான் யானைக்குட்டி. கொஞ்சமும் சுருங்கவில்லை அந்த மூக்கு. பார்த்துப் பார்த்து கண்வலி வந்ததுதான் மிச்சம்.

என் செல்லக்கண்மணிகளே! முதலை இழுஇழு என்று இழுத்ததில் அந்தக் குட்டி மொன்னை மூக்கு இக்கால தும்பிக்கையின் அளவிற்கு நீளமாகியிருந்தது என்பது பார்த்தாலே புரிந்துவிட்டது இல்லையா?




மூன்றாம் நாள் இறுதியில் ஈ ஒன்று அவன் தோள்மீது அமர்ந்து கடித்தது. சட்டென தன் நீளதும்பிக்கையை தூக்கி பொட்டென போட்டவுடன், பொத்தென செத்து விழுந்தது அந்த ஈ. “முதல் லாபம்! அந்த மொன்னை மூக்கால் இப்படி செய்திருக்க முடியாதில்லையா? சரிசரி கொஞ்சம் சாப்பிடு'' என்றது இருநிற மலைப்பாம்பு.

அட! யானைக்குட்டி தன் நீளதும்பிக்கையால் சட்டென ஒரு கொத்து புல்லை அப்படியே பிடுங்கி, கால்களின் இடையே படால் படால் என தட்டி மண்ணை உதறினான். அப்படியே லபக்கென நீளதும்பிக்கையால் புல்லை வாய்க்குள் போட்டுக்கொண்டான்.



“இரண்டாம் லாபம்!’ என்ற இருநிற மாலைப்பாம்பு தொடர்ந்து, அந்த மொன்னை மூக்கால் இப்படி செய்திருக்க முடியாதில்லையா? ரொம்ப வெயிலாக இல்லை?” என்றது.

‘ஆமாமாம்’ என்றான் குட்டியானை. சட்டென தன் நீளதும்பிக்கையால் அந்த பெரிய பச்சை நிற பிசுபிசு லிம்பொப்போ நதிக்கரையில் இருந்த சேற்றை ஒரு கவளம் எடுத்து உருண்டையாக உருட்டி தன் தலைமேல் ‘சப்பென’ போட்டுக் கொண்டான் யானைக்குட்டி. சில்லென்ற வழவழா கொழகொழா சேற்றுத் தொப்பி தயார்! முறக்காதுகளின் பின் சில்லென வழிந்தோடியது சேறு.




“மூன்றாம் லாபம்!” என்ற இருநிற மலைப்பாம்பு, “அந்த மொன்னை மூக்கால் இப்படி செய்திருக்க முடியாதில்லையா? திரும்பவும் உதை வாங்குவதைப் பற்றி என்ன நினைக்கிறாய் இப்போது?”

“ம்…ஐயா…அய்யய்யோ உதை வேண்டவே வேண்டாம்’’ என்றான்.

“சரி… அப்போ நீ யாரையாவது உதைக்கத் தயாரா?”, சீண்டிப் பார்த்தது இருநிற மலைப்பாம்பு.

“உதைக்க நான் தயார்தான்,’’ சிரித்தான் யானைக்குட்டி.

“உன்னுடைய நீளமான புது மூக்கு பிறரை உதைக்க ரொம்பவே உதவும்,” விளையாட்டாய் சொன்னது இருநிற மலைப்பாம்பு.

“ரொம்ப நன்றி ஐயா. நினைவில் வைத்துக் கொள்கிறேன். என் உற்றார் உறவினரை சந்திக்க வீட்டுக்குப் போகப் போகிறேன், நீங்கள் சொல்வது நிஜமா என்று பார்க்கிறேன” என்றான் யானைக்குட்டி.



நீளதும்பிக்கையை இந்தப்பக்கம் அந்தப்பக்கம் ஆட்டிக்கொண்டே ஆப்பிரிக்காவில் தன் வீட்டை நோக்கிச் சென்றான் யானைக்குட்டி. பசிக்கும்போது மரத்திலிருந்த பழங்களை லபக்கென பறித்து சாப்பிட்டான். பழம் எப்போது கீழே விழும் என்று முன்போல் காத்திருக்கத் தேவையில்லை. சடக்கென புல்லை பிடுங்கிச் சாப்பிட்டான். புல் திண்ண, முன்போல் முட்டி போட்டு கீழே உட்காரத் தேவையில்லை. கடிக்கும் பூச்சிகளை, மரக்கிளையை ஒடித்து விசிறி விரட்டினான். சில்லென்ற வழவழவா கொழகொழா சேற்றுத் தொப்பி தேவையான போதெல்லாம் செய்துகொண்டான்.

பெரிய ஆப்பிரிக்காவில் தனியாய் இருப்பது போல் தோன்றினால் உடனே பாட்டு பாடினான். நீளதும்பிக்கை வழியே வந்த பாடல் சத்தம் முன்பைவிட ரொம்பவே பெரிதாய் அதிர்ந்து ஒலித்தது, கேட்டது. பெரிய நீர்யானை ஒன்றை (அந்த பெரிய பெரியம்மா கிடையாது) தேடிப்பிடித்து தன் நீளதும்பிக்கையால் ஒரு உதை வைத்தான். இருநிற மலைப்பாம்பு சொன்னது நிஜமா என்று பார்க்கத்தான். மற்றபடி லிம்போப்போவிற்கு வரும்போது, தான் கீழே இரைத்த தர்பூசணியின் தோல்களை இப்போது நீண்ட தும்பிக்கையால் பொறுக்கி எடுத்தான்- சுத்தமான ஐந்து கரத்தான் இவன்!

ஒரு இருண்ட மாலைநேரத்தில் தன் குடும்பத்தினரிடம் வந்து சேர்ந்தான். தன் நீளதும்பிக்கையை சுருட்டிக்கொண்டு, “எல்லோரும் எப்படி இருக்கீங்க?” என்று கேட்டான். அவனைப் பார்த்து எல்லாரும் குஷியாய் “வாடா…வாவா… திரும்பவும் உதை வாங்கிக்கோ, உன்னோட தீராத *துருதுரு கேள்வித்தாகத்து*க்கு”

“அடபோங்கப்பா… உதைக்கறதுன்னா உங்களுக்கெல்லாம் என்னன்னே தெரியாது, நான் காண்பிக்கிறேன் பாருங்க” என்றான்.



நீண்ட தும்பிக்கையால் பொட்டு பொட்டென போட்டதில், குட்டித் தம்பிகள் தலை தெறிக்க ஓடினார்கள். “அடப்பாவி… நீ எங்கே இதை கத்துகிட்ட? ஆமாம்… உன் மூக்கை என்ன பண்ணினே?” என்று அவர்கள் கேட்டார்கள்.

“அந்தப் பெரிய பிசுபிசு பாசிநிற லிம்போப்போ நதிக்கரையில் இருந்த முதலையிடம் இரவு உணவிற்கு நீங்கள் என்ன சாப்பிடுவீர்கள் என்று கேட்டேன். இந்த புதிய மூக்கை எனக்குத் தந்தது முதலை” என்றான்.

“ஐய்ய… இது அசிங்கமா இருக்கு” என்றார் அடர்ந்தமுடி அத்தான் பபூன். “ஆமாம்தான், ஆனா ரொம்ப பயனுள்ளது இது” என்று சொல்லிவிட்டு, அந்த அடர்ந்தமுடி அத்தான் பபூனை அலாக்காக அப்படியே நீளதும்பிக்கையால் தூக்கி குளவிக் கூட்டின் மேல் வீசி எறிந்தான் குட்டியானை.



குடும்பத்தில் எல்லோரையும் தன் புதிய தும்பிக்கையால் ஆசையாய் மொத்து மொத்தினான். எல்லோரும் இதை அதிசயமாகப் பார்த்தார்கள். நெருப்புக்கோழி அத்தையின் இறகுகளை ஆசையாய் இழுத்தான். ஓங்கி வளர்ந்த ஒட்டகச்சிவிங்கி மாமாவின் பின்னங்கால்களை வம்பாய் இழுத்து முள்புதருக்குள் தள்ளிவிட்டான்.





பெரிய பெரியம்மா நீர்யானை நன்றாய் சாப்பிட்டு முடித்து தூங்கிக் கொண்டிருந்தாள். ஓசைப்படாமல் அருகில் சென்று, நீளதும்பிக்கையை அவள் காதருகில் வைத்து, 'பூம்' என சத்தமாய் ஊதினான்.



கூடவே ப்ளுக்ப்ளுக்கென கொஞ்சம் நீர்க்குமிழிகளையும் அவள் காதுக்குள் ஊதிவிட்டான்.



ஆனால் கொலோகொலோ பறவையை மட்டும் யாரும் எதுவும் வம்பு செய்யாமல் பார்த்துக் கொண்டான்.

அவனின் அன்பான குடும்பத்தினர் எல்லோரும் ரொம்ப குஷியாகிப் போனார்கள். நல்மரங்கள் நிறைய இருந்த அடர்ந்த பெரிய்ய்ய பிசுபிசு பச்சைநிற லிம்போப்போ நதிக்கரைக்குப் போய் முதலையிடம் புதிய மூக்கு வாங்கிவர ஒவ்வொருத்தராய் புறப்பட்டார்கள்.
எல்லாரும் திரும்பி வந்தபின், யாரும் யாரையும் மொத்து மொத்தென உதைக்கவில்லை. அட! என் செல்லக் கண்மணிகளே... இதற்கப்புறம் துருதுரு குட்டி யானையின் நீளதும்பிக்கை போலவே, நீங்கள் பார்க்கும் எல்லா யானைகளுக்கும், பார்க்காத யானைகளுக்கும் தும்பிக்கை ஆகியிருந்தது.

முற்றும்

Knowledge without Borders

எல்லை இல்லா அறிவு

2005ல் நிறுவப்பட்டு, இரு ஃப்ரெஞ்ச் அறிவியலாளர்களால் நடத்தப்படும் லாப-நோக்கமற்ற ஒரு சங்கம். இலவசமாக தரவிறக்கம் செய்யக்கூடிய PDFகள் மூலம் அறிவியல் அறிவைப் பரப்புவது இதன் நோக்கம். 500000க்கும் அதிகமான தரவிறக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. 40 மொழிகளில், 565 மொழிபெயர்ப்புகளை எட்டியுள்ளார்கள்.



**ஜீன் ப்யரி பெடிட்**



**கில்லஸ் டி அகஸ்டனி**

http://www.savoir-sans-frontieres.com